<u>1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>
<u>O.S.No.471/2019</u>

15.04.2025 வா.சா.1 திருமதி. ரஹனா பானு

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் இந்த வழக்கின் 1ம் வாதி ஆவேன். என்னுடைய தகவலின் பேரில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியும். பொதுச்சுவரில் ஜன்னல் வைத்துள்ளதாலும், வீடு கட்டுமானம் நடைபெறும் பொழுது சுவரில் தண்ணீர் இறங்கியது சம்பந்தமாகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நானும் பிரதிவாதியும் உறவினர்கள் என்றால் சரிதான். எனது தாயாரின் சகோதரிதான் பிரதிவாதி என்றால் சரிதான்.

2) நானும், எனது தாயார் மற்றும் பிரதிவாதியும் ஒரே நபரிடமிருந்து சொத்து வாங்கியவர்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்து வாங்கிய பொழுது எந்த நிலையில் இருந்ததோ அதை நிலையில்தான் தற்பொழுதும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே எவ்வித பிரச்சனையும் இருந்ததா என்றால், பிரச்சனை இருந்தது பெரியவர்களை வைத்து பேசி முடித்துக் கொண்டோம். பிரதிவாதி வீடு கட்டிய பின்புதான் வழக்கின் பிரச்சனை வந்தது என்றால் சரிதான். பெரியவர்களை வைத்து பேசியது என்ன பிரச்சனைக்காக என்று குறிப்பிட்டு எதுவும் கூற இயலாது.

3) எனது வீட்டின் அளவுகள் பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக சொத்தினை சர்வேயரை வைத்து அளந்து நீதிமன்றத்தில் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு தமிழ் படிக்க தெரியும். வா.சா.ஆ.1ல் முதல் தபசிலில் முதலாவதாக காட்டப்பட்டுள்ள சொத்தில் கிழமேல் வடதலை 9.5 அடி என்றும், தென்தலை 10.5 அடி என்றும், தென்வடல் 39 அடி என்றும் காட்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய தாயாரின் சொத்தின் அளவு என்னவோ அதே சமஅளவுதான் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

4) தென்வடல் 39 அடியில் நீளத்திற்கும் வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கும் முழுமையாக வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி 39 அடி நீளத்திற்கு அப்பாற்பட்டு வாதிகளும் பிரதிவாதியும் காலிமனையாக வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். 39 அடிக்கு உள்ளாக நானோ அல்லது பிரதிவாதியோ எந்தவிதமான வீடும் கட்டவில்லை என்றால் சரிதான். 2019 வழக்கிற்கு முன்பாக பிரதிவாதி பொதுமுற்றத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பது சம்பந்தமாக எந்தவிதமான வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5) வா.சா.ஆ.1ல் எனது தாயார் கிரையம் பெற்ற சொத்தில் கிழக்கு பகுதியாக குறிப்பிட்டுள்ள விபரம் சரியா என்றால் சரிதான். அந்த பொதுசுவர் பழமையான சுவர் என்றால் சரிதான். முகப்பிலிருந்து 39 அடி வரை எந்தவித கட்டுமான பணியும் செய்ய இயலாது என்றால் சரிதான். எனது வீட்டினை நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் பார்வையிட்டு, அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். அளந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6) பிரதிவாதி மேற்படி 39 அடிக்கு மேலாக உள்ள காலிமனையில் கான்கிரீட் வரை அமைத்து வீடு கட்டி முடித்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி ஆக்கிரமிப்பை அகற்றிவிடுவதாக காவல் நிலையத்தில் கூறியதாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி புதியதாக வீடு கட்டும் பொழுது பில்லர் அமைத்துதான் வீடு கட்டினார் என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)